1982 மார்ச் 16]

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு முந்திரி உற்பத்தி செய்வதை அடுத்த மாநிலத்தில் வாங்கிச் செல்வதை தடை செய்யப்படுமா? இங்கு கிடைக்கின்ற முந்திரியை அரசாங்கமே, கூட்டுறவுத் துறை மூலம் அதைக் கொள் முதல் செய்து, முறையாக முந்திரி ஆலைகளுக்கு விநியோகம் செய்யுமா? அதோடு, மூடிக் கிடக்கின்ற முந்திரி ஆலைகளை அரசே ஏற்று நடத்துமா? முந்திரிக் கழகத்தை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், இங்கே உற்பத்தியாகும் முந்திரியை இங்கே உள்ள தொழிற் சாலைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று, தொழிற்சாலை முனைவர்கள் அரசுக்கு ஒரு மனு அளித்திருக்கிறார்கள். அதன்மீது அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் திட்டம்.

*வினா எண். 478—திரு. ப. தீர்த்தராமன்; திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மற்றும் போரூரில் உள்ள கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அடையார் மற்றும் போரூரில் மூடப்பட்டு இருக்கும் கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற் சாலையை தொழிற் கூட்டுறவு சங்கமாக நடத்த அரசின் அனுமதி கேட்டு அதன் தொழிலாளர்களிடமிருந்து வந்துள்ள மனு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் போரூரில மூடப்பட்டிருக்கும் கேஞ்சஸ் அச்சிடும் மை தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்துவதற்கு, இதுவரை அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலையினுடைய தலைமையகம் கல்கத்தாவில் இருக்கிறது. கடன் காரணமாக அதன் மீது வழக்குபோட்டு, அது லிக்வியூடேஷனில் இருந்து அங்கே கல்கத்தாவில் இருக்கிற தொழிலாளர்கள் தாங்களே நடத்த முன்வந்த காரணத்தாலே நீதிமன்றம் அவர்களை நடத்த அனுமதித்துள்ளது. அதைப்போல சென்னையிலே இருக்கிற தொழிலாளர்கள் தாங்களே நடத்துகிறோம் அதற்கு அரசாங்கத்தினுடைய உதவி வேண்டும் என்று அரசிற்கு மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது இன்றைக்கு தொழிற்துறை பரிசீலனை செய்து 27 லட்சம் ரூபாய் முதலீட்டில் அவர்களுக்கு உதவி செய்ய அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த விரும்புவதால் அந்த தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் போது அதிக அளவில் தொழிலாளர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ? அந்தத் தொழிற்சாலையின் மற்ற விவரங்களைக் குறித்தும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே இந்த தொழிற்சாலையை ஏற்று நடத்தாது. அங்கே இருக்கிற 70-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொண்ட ஒரு இன்டஸ்ரியல் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியாக உருவாக்கி அவர்களுக்கு 27 லட்சம் ரூபாய் அரசு சார்பில் கொடுத்து, பிறகு வங்கிகளின் வாயிலாக பிற நிதியாதாரங்களை கொடுத்து தொழிலாளர்களே நடத்துகிற தொழிற்சாலையாகத் தான் இந்தத் தொழிற்சாலை இருக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு சிட் பண்டு துவக்கும் திட்டம்.

*வினா எண். 479—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் வருடம் முதல் அரசு சிட்பண்டு துவக்குவது பற்றி தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) பலன் என்ன?